செ.வெ.எண்.591 நாள்.17.11.2017

**வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஏகாம்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 167 மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

**************

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஏகனாம்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 167 மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கி பேசியதாவது,

2016–2017 கல்வி ஆண்டில் 27,796 மடிக்கணினிகள் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்படவுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 73 மேல்நிலைப்பள்ளிகளுக்கு வழங்கும் பொருட்டு 19,998 மடிக்கணினிகள் பெறப்பட்டுள்ளன. உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாயக்கன்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, ஏகானம்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, வாலாஜாபாத் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, வாலாஜாபாத் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு 798 மடிக்கணினிகள் இன்று வழங்கப்பட்டது. முன்புள்ள காலங்களில் நம்முடைய அறிவு திறனை வளர்த்துக்கொள்ளவும், கல்வி அறிவு மேம்படுத்தவும் நூலங்களை நாடி புத்தகங்களை படித்து குறிப்புகள் எடுத்து நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். தற்போது அந்நிலை மாறி மடிக்கணினிகள் மூலம் உலக தரத்திற்கு ஈடாக மாணவ/மாணவியர்கள் தங்களது பொது அறிவை கல்வித்திறன் மேம்படுத்திக் கொள்ள முடியும். மாணவ/மாணவியர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டு சிறந்த கல்வி அறிவு பெற்று முன்னேற வேண்டும் என தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டம், ஏகனாம்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கே.மரகதம் குமரவேல், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி ஆகியோர் உள்ளனர்.

முன்னதாக, ஐயம்பேட்டை ஊராட்சியில் ரூ.14.43 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப, அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கே.மரகதம் குமரவேல், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.